**டிசம்பர் – 03**


# TNPSC துளிகள்

- நிலப்பரப்பில் இருந்து நிலப்பரப்பில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நீண்ட வரம்பு கொண்ட (தொலைவு) மற்றும் அணுசக்தி திறன் கொண்ட, கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி - 3 என்ற ஏவுகணையின் முதலாவது இரவு நேரச் சோதனையானது ஒடிசா கடற்கரையில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் மேற்கொள்ளப் பட்டது.
    - இருப்பினும், அக்னி - 3 ஏவுகணையின் இந்த முதலாவது இரவு நேரச் சோதனை ‘தோல்வியில்’ முடிந்தது.
- உறைந்த சேற்றில் பல நூற்றாண்டுகளாக புதையுண்டு இருந்த 18,000 ஆண்டுகள் பழமையான நாய்க் குட்டியானது சமீபத்தில் ரஷ்யாவில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்திய இராணுவம் அதன் தாக்குதல் திறன்களை சோதிப்பதற்காக அருணாச்சலப் பிரதேசத்தில் ஒரு மாத காலப் பயிற்சி நடவடிக்கையான ‘ஹிம் விஜய்’ என்று அழைக்கப் படும் ஒரு பயிற்சியினை மேற்கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா ஊழல் ஆய்வு 2019

- 2019 ஆம் ஆண்டின் இந்திய ஊழல் ஆய்வின் படி, ராஜஸ்தான் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் ஊழல் தொடர்பானவற்றில் நாட்டில் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. ராஜஸ்தான் மாநிலத்தில் 78 சதவிகிதத்தினரும் பீகார் மாநிலத்தில் 75 சதவிகிதத்தினரும் லஞ்சம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த ஆய்வில் தெலுங்கானா மாநிலம் தென்னிந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.
- இந்த ஆய்வானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது. இது லோக்கல் சர்கில்ஸ் என்ற ஒரு சமூக ஊடக நிறுவனம் மற்றும் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் இந்தியா என்ற அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து மேற்கொள்ளப் பட்டது.




- இந்த ஆய்வில் ராஜஸ்தான் மாநிலத்தைத் தொடர்ந்து பீகார் மாநிலமானது

இரண்டாவது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

- மிகவும் ஊழல் நிறைந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் ஏழாவது இடத்தில் உள்ளது. இங்கு சுமார் 62% மக்கள் தங்கள் வேலையைச் செய்வதற்கு லஞ்சம் கொடுக்க ஒப்புக் கொள்கின்றனர்.
- கேரள மாநிலத்தைத் தவிர, கோவா, குஜராத், ஒடிசா, மேற்கு வங்கம், ஹரியானா மற்றும் தில்லி ஆகிய மாநிலங்கள் ஊழல் குறைந்த மாநிலங்களாகும்.

## "ஒரே பாரதம், உன்னத பாரதம்" மீதான கருத்தரங்கு

- 'ஜல் சக்தி மற்றும் பேரிடர் மேலாண்மை" ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் "ஒரே பாரதம், உன்னத பாரதம்" என்ற திட்டத்தின் 2 நாட்கள் நடைபெறும் ஒரு பிராந்தியக் கருத்தரங்கானது ஜம்முவில் நடத்தப் பட்டது.
- இது தமிழ்நாடு அரசு மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றுடன் இணைந்து மத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறை ஆகியவற்றினால் நடத்தப்பட்டது.

### ஒரே பாரதம், உன்னத பாரதம்

- இது சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தின விழாவை முன்னிட்டு ஏக்தா திவாஸ் (2016 ஆம் ஆண்டு அக்டோபர் 31) அன்று பிரதமரால் தொடங்கப்பட்டது.
- இது நாட்டின் பல்வேறு பகுதிகளின் கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதையும் பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் மக்களிடையே பரஸ்பர உறவுகளை மேம்படுத்தி வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 47வது அகில இந்திய காவல்துறை அறிவியல் மாநாடு

- 47வது அகில இந்திய காவல்துறை அறிவியல் மாநாடானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 28 மற்றும் நவம்பர் 29 ஆகிய தேதிகளில் உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் உள்ள காவல்துறையின் தலைமையகத்தில் நடத்தப்பட்டது.




- இந்த மாநாட்டின் தலைமை விருந்தினராக முன்னாள் காவல்துறை அதிகாரியும் புதுச்சேரியின் தற்போதையத் துணைநிலை ஆளுநருமான கிரண் பேடி கலந்து

கொண்டார்.

- இந்த மாநாடானது காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (Bureau of Police Research and Development - BPR&D) ஏற்பாடு செய்யப்பட்டது.
- 22 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வருடாந்திர மாநாட்டை உத்தரப் பிரதேச மாநிலம் நடத்துகின்றது.
- இந்த மாநாடானது காவல்துறையில் பரவியிருக்கும் சவால்கள் மற்றும் அதனோடு நெருங்கிய தொடர்புடைய தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையான 5 தலைப்புகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## பாகிஸ்தானில் அரிய புத்தர் சிலை

- இஸ்லாமாபாத் அருங்காட்சியகமானது புத்தரின் தலையைக் கொண்ட ஒரு அரிய சிலையை, அதன் இருப்பிடத்திலிருந்து மீட்டெடுத்த பிறகு அதனைப் பொது மக்கள் பார்வைக்கு வைத்துள்ளது.
- கி.பி 3 முதல் 4 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்த இந்த சிற்பம் பாகிஸ்தானில் முதலாவது இத்தாலிய தொல்பொருள் அகழாய்வுத் திட்டத்தால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- 1960 ஆம் ஆண்டில் இந்த கலைப்பொருள் தோண்டி எடுக்கப் பட்டது. இது கடைசியாக 1997 ஆம் ஆண்டில் ஒரு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டது.



## நிலச்சரிவு அபாயக் குறைப்பு மற்றும் அதனைத் தாங்கிக் கொள்ளும் திறன் மீதான முதலாவது சர்வதேச மாநாடு

- 2019 ஆம் ஆண்டின் 'நிலச்சரிவு அபாயக் குறைப்பு மற்றும் அதனைத் தாங்கிக் கொள்ளும் திறன்" மீதான முதலாவது சர்வதேச மாநாடானது புது தில்லியில் நடத்தப் பட்டது.
- இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது மாநாடான இது இந்தியாவின் தேசியப்

பேரிடர் மேலாண்மை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.

- இது தேசிய மற்றும் சர்வதேச அளவில் நிலச்சரிவு அபாயக் குறைப்பு மற்றும் அதனைத் தாங்கிக் கொள்ளும் திறனுக்கானச் சூழ்நிலைக்கு உகந்த வகையில் பயனுள்ள அறிவு, அனுபவங்கள், தகவல் மற்றும் புதுமைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதிப்பதற்கு/ கலந்துரையாடுவதற்கு/பரப்புவதற்கு அனைத்துப் பங்குதாரர்களையும் மற்றும் திற நிபுணர்களையும் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## கடன் வழங்குபவரின் பொறுப்பு குறித்த நெறிமுறை – குழு

- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநரான எச்.ஆர் கான் என்பவர் கடன் வழங்குபவரின் (நுண் கடனில்) பொறுப்பு குறித்த நெறிமுறையின் (Code for Responsible Lending - CRL) வழிகாட்டுக் குழுவின் முதலாவது தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- CRL என்பது நுண் கடன் வழங்குதல் துறையில் உள்ள வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் - நுண் நிதியியல் நிறுவனம் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனம் போன்ற பல்வேறு அமைப்புகளுக்கான ஒரு சுய ஒழுங்குமுறை நடவடிக்கையாகும். இது வாடிக்கையாளர் பாதுகாப்பின் தரத்தினைப் பின்பற்றுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடற்படை வகை பிரம்மோஸ் ஏவுகணை – சோதனை

- இந்தியக் கடற்படையானது கடற்படையின் மறைந்திருந்து தாக்கி அழிக்கும் ஐஎன்எஸ் கொச்சி என்ற கப்பலிலிருந்து பிரம்மோஸ் என்ற மீயொலி வகை ஏவுகணையை சோதனை செய்தது.
- இந்த ஏவுகணையானது அரேபியக் கடலில் பணியிலிருந்து நீக்கப்பட்ட கப்பலை இலக்காகக் கொண்டு, அதனை வெற்றிகரமாக தாக்கி அழித்தது.
- இதற்கு முன்பு பிரம்மோஸ் ஏவுகணையானது ஐஎன்எஸ் கொல்கத்தா என்ற கப்பலிலிருந்து இரண்டு முறை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது (ஜுன் 2014 மற்றும் பிப்ரவரி 2015). 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐஎன்எஸ் கொச்சி என்ற

கப்பலிலிருந்து இதன் ஒரு வெற்றிகரமான சோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

- பிரம்மோஸ் ஆனது கப்பலிலிருந்து செலுத்தப்படும் உலகின் ஒரு அதிவேக ஏவுகணை ஆகும். இதன் தாக்குதல் வரம்பு 290 கி.மீ ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## புதிய மீன் இனம் - சிஸ்டுரா சிங்காய்

- மேகாலயாவின் மேற்கு காசி மலை மாவட்டத்தில் ஒரு புதிய மீன் இனத்தை விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளது.
- "சிஸ்துரா சிங்காய்" என்ற அறிவியல் பெயர் கொண்ட இந்த மீன் இனமானது வா ப்ளீ என்ற ஆற்றின் துணை நதியான டுவாடிடோஹ் என்ற ஓடையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த மீனின் இரு பாலினங்களும் கருப்பு நிறப் பக்கவாட்டுக் கோடுகளுடன் தங்க - பழுப்பு நிற உடல் அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த மீனின் வால் துடுப்புகள் விரிவடைந்து காணப் படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## கோனார்க் திருவிழாவின் 30வது பதிப்பு

- ஒடிசா மாநில ஆளுநரான கணேஷி லால் என்பவர் 5 நாட்கள் நடைபெறும் கோனார்க் திருவிழாவின் 30வது பதிப்பைத் தொடங்கி வைத்தார்.




- ஒடிசாவின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை எடுத்துக் காட்டும் இத்திருவிழாவானது ஒடிசாவில் தொடங்கியது.
- இத்திருவிழாவின் கருப்பொருள் சுற்றுச்சூழல் சுற்றுலா, கண்காட்சிகள், கலாச்சாரம், பெண்களுக்கு அதிகாரமளிப்பு, நெகிழிப் பொருள்கள் ஒழிப்பு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- இதனுடன் சேர்த்து, 2019 ஆம் ஆண்டின் சர்வதேச மணல் கலை விழாவின் 8வது பதிப்பானது ஒடிசாவின் சந்திரபாகா கடற்கரையில் தொடங்கியுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 3 வது கேலோ இந்திய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2020

- மத்திய விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜு கேலோ இந்திய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் (KIYG - Khelo India Youth Games) 3வது பதிப்பை அசாமின் குவஹாத்தியில் தொடங்கி வைத்தார்.
- இந்த விளையாட்டுப் போட்டிகள் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி முதல் ஜனவரி 22 ஆம் தேதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.




- தொடக்க விழாவின் போது இந்த விளையாட்டுப் போட்டிகளின் 3வது பதிப்பின் கலப்பு இலச்சினை, விளையாட்டு வீரர்களின் உடை, சின்னங்கள் மற்றும் பாடல் ஆகியவை அறிமுகப் படுத்தப்பட்டன.
- மேலும், அஸ்ஸாம் ஒலிம்பிக் மன்றமானது அம்மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு, அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 'கிராஸ்ரூட் ஒலிம்பிக் - மிஷன் டேலண்ட் ஹன்ட்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## ஓய்வூதிய வாரம் - நவம்பர் 30 முதல் டிசம்பர் 6 வரை

- இந்தியா முழுவதும் ஓய்வூதிய வாரமானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி முதல் டிசம்பர் 6 ஆம் தேதி வரை இந்திய அரசு மற்றும் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் ஆகியவற்றினால் இணைந்து அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இத்தினமானது பிரதான் மந்திரி ஸ்ராம் யோகி மன் - தன் (Pradhan Mantri Shram Yogi Maan-dhan - PM-SYM) மற்றும் வர்த்தகர்கள் & சுயதொழில் செய்பவர்கள் ஆகியோருக்கான தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயனாளிகளை அதிகப்படுத்துவதையும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- இது ஓய்வூதிய திட்டங்களின் நன்மைகள் குறித்து ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் 10 கோடி பயனாளிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் உள்ள 11 கோடி தொழிலாளர்கள், 2.5 கோடி சுய உதவிக்குழு உறுப்பினர்கள், 40 லட்சம் அங்கன்வாடி தொழிலாளர்கள் மற்றும் 10 லட்சம் ஆஷா தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்ய இருக்கின்றது.

## உலக கணினிக் கல்வி தினம் - டிசம்பர் 2

- உலக கணினிக் கல்வி தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 2 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- கணினிகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பதற்கும் கணினிகள் மற்றும் பிற மின்னணு சாதனங்கள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும் இந்தத் தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- உலக கணினிக் கல்வி தினமானது முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (National Institute of Information Technology - NIIT) அனுசரிக்கப் பட்டது.

## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் - டிசம்பர் 2

- தொழில்துறை நடவடிக்கைகள் அல்லது மனித அலட்சியம் ஆகியவற்றால் ஏற்படுத்தப்படும் மாசுக்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் நிர்வகிப்பது ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 2 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- 1984 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போபால் விஷவாயு விபத்தில் உயிரிழந்த அப்பாவி மக்களை நினைவு கூரும் வகையில் இந்தத் தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டானது போபால் விஷவாயு விபத்தின் 35வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.




## அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 2

- அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 02 அன்று அனுசரிக்கப் படுகின்றது.




- இந்தத் தினமானது 1949 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★